மொனறாகலை பிரதேச சபை - 2024

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மொனறாகலை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொனறாகலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
.(அ)	மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா. 1,231,200 பெறுமதியான 162 நீர்மானிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	இது கணக்கீட்டு பிழையொன்றாகும். தற்போது சீராக்குவுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.	சொத்துக்களின் பெறுமதி உள்ளடக்கப்பட்டு கணக்குகளக் சீராக்கம் செய்யப்பட வேண்டும்.
.(ஆ)	மீளாய்வாண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு சபைக்கு சொந்தமான பொது மயான பூமியில் எஞ்சியிருந்த ரூபா. 138,280 பெறுமதியான 288.1 கிலோ கிராம் எரிவாயு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை.	- மேற்படி -	இருப்பு பெறுமதி உள்ளடக்கப்பட்டு கணக்குகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும்.
.(இ)	மீளாய்வாண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா. 75,960 பெறுமதியான எழுதுகருவிகள் இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	- மேற்படி -	கணக்குகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும்.
.(ஈ)	வீதி அபிவிருத்தி திட்டத்திற்காக செலுத்த வேண்டிய பற்றுச் சீட்டுக்களின் பெறுமதி ரூபா. 193,799 குறைவாகவும், மூலதன செலவினம் ரூபா. 193,799 குறைவாகவும் காட்டப்பட்டுள்ளது.	- மேற்படி -	- மேற்படி -

.(உ)	பிரதேச சபை விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு அமைவாக வீதிகளின் பெறுமதி கணக்கிடப்படாது, மீளாய்வாண்டில் ஆண்டில் வீதி மதிப்பீட்டிற்காக செலவிடப்பட்ட ரூபா. 21,621,719 தொகை மூலதன மாக்கப்பட்டிருந்து.	- மேற்படி -	- மேற்படி -
.(ஊ)	சபைக்கு சொந்தமான ரூபா 305,587,500 பெறுமதியான மதிப்பீடு செய்யப்பட்ட 09 காணிகள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் நிதி நிலைமை கூற்றில் ரூபா. 161,801,813 ஆக காணிபிக்கப்பட்டிருந்த போதும் நடைறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா. 143,785,687 குறைத்து காண்பிக்கப்பட்டுள்ளது.	இது கணக்கீட்டு பிழையொன்றாகும். தற்போது சீராக்குவுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.	கணக்குகள் சீராக்கப்பட வேண்டும்.

1.7 இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

	சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய இன் 1597/8 ஆம் இலக்க வர்த்தமானி	சபையினால் 2018 ஆம் ஆண்டு முதல் 2020 வரை அங்கீகரிக்கப்பட்டிருந்த 135 கட்டிட திட்டங்களில் 116 கட்டிட திட்டங்களுக்காக இணக்கச் சான்றிதழ் வழங்கப் பட்டிருக்கவில்லை.	அனைத்து கட்டிட திட்டங்களுக்காக இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.	அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டம்	பிரதேச சபையில் சேவை புரியும் 06 ஊழியர்களுக்காக 2015 ஜனவரி முதல் 2024 ஜூலை மாதம் வரையான காலப் பகுதிக்குரிய ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை ரூபா 179,039 தொகை கட்டணம் கொடுப்பனவு செய்யப் பட்டிருக்கவில்லை.	இதற்காக அங்கீகாரம் கிடைத்தவுடன் கொடுப்பனவு செய்வதாக	ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையை உரிய நேரத்தில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக மாநகர சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 40,206,090 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,465,208 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபை செயயாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமான மூலம்	மதிப்பிடப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பிடப்பட்ட வருமானம்	பட்டியலிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
(i)	வீதவரியும் வரியும்	15,085,800	14,874,821	12,452,555	19,152,883	14,123,230	13,710,743	16,106,287	17,314,706
(ii)	வாடகை	23,796,650	31,948,489	25,875,436	23,389,627	20,775,000	23,805,274	21,358,681	19,207,720
(iii)	அனுமதிப் பத்திரக் கட்டணங்கள்	2,230,100	756,258	756,258	-	1,558,100	1,710,024	1,710,024	-
(iv)	ஏனைய வருமானம்	19,382,000	55,869,860	55,869,860	-	29,246,336	39,694,842	39,694,842	-
		60,494,550	103,449,428	94,954,109	42,542,510	65,702,666	78,920,883	78,869,834	36,522,426

2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் பட்டியலிடப் பட்ட ரூபா 103,449,428 ஆன மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 42,542,510 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் அது மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 41சதவீதமாக இருந்தது.	நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	பட்டியலிடப்பட்ட வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	**<u>வீதவரியும் வரியும்</u>**		
(i)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 14,874,821 தொகையான வீதவரியை அறவிடுவதற்காக பட்டியலிடப்பட்டிருந்ததுடன் 1 மொத்த வீதவரி வருமானனத்தில் 46 சதவீதமான தொகையான ரூபா 6,841,673 தொகை மேலும் அறவிட வேண்டியிருந்தது.	நிலுவை தொகையை விரைவாக அறவிடுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக	நிலுவை வீதவரியை விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2019 இற்கு முன்னைய ஆண்டுகளில் இருந்து 2023 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டிய நிலுவை வீதவரி ரூபா 12,311,210 ஆக இருந்தது.	மேலும் நிலுவையான தொகைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	**<u>வாடகை</u>**		
	மீளாய்வாண்டின் சபைக்குரிய 128 கடைகளில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 10,006,680 ஆக இருந்ததுடன் அந்த வருமானத்திலிருந்து 48 சதவீதம் அதாவது ரூபா 4,799,265 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.	நிலுவை தொகையை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும்.
(ஈ)	**<u>ஏனைய வருமானங்கள்</u>**		
(i)	மீளாய்வாண்டின் சபைக்கு உரிய 12 கேள்வி ஆதனங்களை குத்தகைக்கு வழங்கும் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 17,279,959 ஆக இருந்ததுடன் அவ் வருமானத்தில் 21 சதவீதம் அதாவது ரூபா 3,587,383 தொகை மேலும் அறவிட வேண்டி காணப்பட்டது.	நிலுவை தொகை தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதாக	உடன்படிக்கையின் பிரகாரம் பட்டியலிடப்பட்ட வருமானம் விரைவில் சேகரிக்கப்பட வேண்டும்.
(ii)	மீளாய்வாண்டின் ஜனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு 2016 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை நிலுவை கேள்வி ஆதனங்கள் குத்தகைக்கு வழங்கும் வருமானம் ரூபா 10,665,776 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 6 சதவீதம் அதாவது ரூபா 657,642 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.	இத்தொகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கைகளை எடுப்பதாக	சட்ட ரீதியாக நடைமுறைகளை எடுத்து நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும்.
(iii)	மீளாய்வாண்டிற்காக 92 நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை அறிவித்தல் பதாதை வருமானம் ரூபா 126,850 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியதாக இருந்தது.	இத்தொகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கைகளை எடுப்பதாக.	அறிவித்தல் பதாதை கட்டணங்களை ஆண்டிலேயே அறவிடப்பட வேண்டும்.

(iv)	2020 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை 271 பாவனையாளர்களடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 2,275,350 ஆக இருந்தது.	இத்தொகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கைகளை எடுப்பதாக.	நிலுவைத் தொகையை விரைவாக அறவிட வேண்டும்.

2.2.3 நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 3,112,128 தொகையும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 36,930,312 தொகையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	நிலுவை வருமானத்தை ஆண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2.3 மிகை அறவீடுகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மாட்டிறைச்சி விற்பனை முறையற்ற குத்தகைக்கு வழங்கும் போது இடம்பெற்ற கவனயீனம் அல்லது முறைகேடு காரணமாக சபை நிதியத்திற்கு ஏற்பட்ட ட்டத்தை அறவிடுவது தொடர்பாக 2007 ஆம் ஆண்டில் விதிக்கப்பட்டிருந்த ரூபா 155,080 ஆன மிகை அறவீட்டில் ரூபா 129,590 தொகையினை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் இறுதி திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்தது.	தவணைப்பணமாக குறித்த பணம் அறவிடப்பட்டு வருவதாக	நிலுவை மிகை கட்டணத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆம் ஆண்டிற்கான பிரதேச சபைக்குச் சொந்தமான 03 ஆம் இலக்க மாட்டிறைச்சிக் கடையின் குத்தகைக்கான முதல் கேள்வியின் போது, அதிக விலைக்கு ஏலத்தை எடுத்த இரண்டு ஏலதாரர்களும் உரிய வைப்புத்தொகையைச் செலுத்தாமல் ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமையால் உள்ளூராட்சிமன்ற ஆணையாளரின் அறிவுறுத்தலின் பேரில் இரண்டாவது	இடம்பெற்ற நட்டத்தை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படுள்ளதாக	நிதிசார்ந்த நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

முறையாக ஏலங்கள் கோரப்பட்ட போது, இரண்டு தரப்பினரும் சபைக்கு எதிராக வழக்குத் தொடர்ந்து ஊவா மாகாண உயர் நீதிமன்றத்தால் வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன. அதன் பிரகாரம், குறிப்பிட்ட சொத்தை 03 மாதங்கள் மற்றும் 08 நாட்களுக்கு சபைக்கு குத்தகைக்கு விட முடியாதிரந்தமை காரணமாக, ரூபா 2,732,121 ஆன நிதி நட்டத்தை வழக்கைத் தாக்கல் செய்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபைப் அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள 54 மயானங்கள் மற்றும் 01 விளையாட்டு மைதானம் என்பவற்றை சபையால் கையேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இந்த மயானங்களை எதிர்காலத்தில் கையேற்றப்பட்ட பிறகு, தீர்வு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	சபைக்குச் சொந்தமான மயானங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் சபையால் கையேற்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபைக்குரிய சொத்துக்களை குத்தகைக்கு வழங்கும் ஒப்பந்தத்தின் பிரிவு 06 இன் படி, மாதாந்த நீர் மற்றும் மின்சார கட்டணங்களை குத்தகையாளர் செலுத்த வேண்டியிருந்த போதிலும், சபைக்குரிய 03 சொத்துக்களை குத்தகைக்கு வழங்கும் போது குறித்த நீர் குழாய்களிலிருந்து வெவ்வேறு தரப்பினர் நீரை எடுப்பதால் குத்தகையாளர்கள் பட்டியல்களை செலுத்த மறுத்து இருந்ததுடன் சபையால் குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களுக்கு நீர் வழங்குவதற்கு முறையான வேலைதிட்டமொன்றை செய்யாததாலும், சபை நிதியிலிருந்து ரூபா 278,520 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	தற்போதுள்ள பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரை, மாதாந்த நீர் கட்டணத்தை சபை நிதியிலிருந்து செலுத்துமாறு செயலாளரால் ஆலோசனை வழங்கத்தப்பட்டதாக	.குத்தகை ஆதனங்களுக்காக தேவையான நீர் வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

3.4 பெறுகை முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அரச பெறுகை வழிகாட்டல்கள் கோவையின் 3.6 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணாக, ஆரம்பத்தில் 100 கிரீன் மின் குமில்களுக்கு விலைகள் கோரப்பட்டன, மேலும் அந்த பெறுகை தீர்மானத்தின் அடிப்படையில், 12 தொடர்ச்சியான சந்தர்ப்பங்களில் 1000 மின்குமிழ்கள் கொள்வனவு செய்யப்பட்டன, அவற்றுக்கு ரூபா. 2,350,000 செலுத்தப்பட்டது. இவ்வாறு, ஆரம்ப பெறுகை திகதியிலிருந்து 06 மாதங்களுக்குப் பிறகு, 250 பல்புகள் கொள்வனவு செய்யப்பட்டு ரூபா . 587,500 செலுத்தப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக	பெறுகை செயற்பாடுகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிப்படையான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	03 வருட உத்தரவாத காலத்துடன் 15 வொட் கிரீன் மின்குமிழ் ஒன்று ரூபா 1,535 வீதம் கொள்வனவு செய்ய முடியுமாக இருக்கையில் பெறுகை குழுவின் தீர்மானத்தின் பேரில் ரூபா 2,350 வீதம் 1000 மின்குமிழ்கள் கொள்வனவு செய்யப்பட்டதால் ரூபா 815,000 நட்டமொன்று சபைக்கு ஏற்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக	பெறுகை செயற்பாடுகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிப்படையான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.5 மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் 07 பதவிகளுக்குரிய 09 ஊழியர்களுக்கு பற்றாக்குறையொன்று காணப்பட்டது.	வெற்றிடங்கள் தொடர்பாக உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக .	பதவியணி வெற்றிடங்களை பூர்த்தி செய்யப்பட வேண்டும்
(ஆ)	2001 ஆம் ஆண்டு முதல் 2004 ஆண்டு வரை பிரதேச சபையின் மூன்று ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 203,762 ஆன ஊழியர் கடன் அறவிடப் பட்டிருக்கவில்லை	மேலும் நிலுவையாக காணப்படும் நிலுவை கடன் மீதிகளை விரைவில் அறவிடுவதாக	.ஊழியர் கடன் மீதிகளை விரைவில் அறவிடப்படல் வேண்டும்

4. <u>கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்</u>

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	**சபையின் கருத்துரை**	**பரிந்துரை**
மீளாய்வாண்டிற்காக பிரதேச சபையால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானங்கள் மற்றும் செலவினங்கள் ஆண்டின் உள்ளவாறான வருமானங்கள் மற்றம் செலவினங்ளுக்கு இடையே ஒப்பிடும் போது 08 வருமான விடயங்களில் 10 சதவீதம் முதல் 37 சதவீதம் வரையிலும் 07 செலவின விடயங்களில் 1 சதவீதம் முதல் 47 வரையான விலகல் காணப்பட்டது	எதிர்காலத்தில் முறையாக பாதீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக	வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டை மிகவும் நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்க வேண்டிதுடன் அந்த இலக்குகளை அடை வதற்கு நடடிக்கை எடுத்தல் வேண்டும்